S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் டிசம்பர் 18 * 2025 * மலர் -1 * இதழ்-200 * VOL-1 * ISSUE-200 விலை ரூ.3 * பக்கம் -4

## கரூர் சம்பவத்திற்கு பிறகு

# ஈரோடு பெருந்துறையில் விஜய் இன்று பிரசாரம்!

## வாகனங்களில் பின்தொடரக்கூடாது: புஸ்ஸி ஆனந்த் அறிவுறுத்தல்!!

சென்னை, டிச.18–

கரூர் சம்பவத்திற்கு பிறகு ஈரோடு பெருந்துறையில் த.வெ.க. தலைவர் விஜய் இன்று பிரசாரம் செய்கிறார். வாகனங்களில் தொண்டர்கள் பின் தொடர கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு த.வெ.க. தலைவர் விஜய் மாவட்ட வாரியாக பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். கரூர் சம்பவத்திற்கு பிறகு திறந்த வெளியில் ஈரோடு பெருந்துறை மூங்கில்பாளையத்தில் இன்று காலை 11 மணிக்கு தவெக தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறஉள்ளது. பின்வரும் வழி காட்டு நெறிமுறைகளைக் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என



விஜய் ஒப்புதலோடு கேட்டுக்கொள்கிறோம். கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தையுடன் இருக்கும் பெண்கள், முதியவர் கள், உடல்நலம் குன்றியோர், பள்ளிச் சிறுவர், சிறுமியர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு அனுமதி இல்லை. விஜய், நிகழ்ச்சிக்கு வரும் போதும், நிகழ்ச்சியை முடித்துவிட்டுச் செல்லும்போதும் அவரது வாகனத்தை இருசக்கர வாகனங்களிலோ அல்லது வேறு வாகனங்களிலோ பின்தொடர்வது, போக்குவரத்திற்கு இடையூறாகச் செயல்படுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதை அறவே தவிர்க்க வேண்டும். மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் கட்டிடங்கள், காம்பவுண்ட் சுவர்கள், மரங்கள்,வாகனங் கள் (பஸ், வேன், ஆட்டோ மற்றும் இருசக்கரவாகனங்கள்),கொடிக் கம்பங்கள் ஆகியவற்றின் மீது ஏறக் கூடாது. மின்விளக்கு கம்பங்கள், மின் கம்பங்கள், டிரான்ஸ்பார்மர்கள் ஆகியவற்றின் அருகில் செல்லக் கூடாது. சிலைகள் மற் மற்றும் அவற்றைச் சுற்றி ஏதும் பாதுகாப்பு கிரில் கம்பிகள், தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தால் அவற்றின் அருகில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின் போது, அப்பகுதிகளில் ஆம்புலன்ஸ் வாகனங்களும், பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும், பள்ளி மாணாக்கர்களுக்கும், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கும் எவ் வித போக்குவரத்து இடையூறும் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பிரசாரம் மேற்கொள்ளும் மைதானம்



ஈரோடு பெருந்துறை விஜயமங்கலம் சுங்கச்சாவடி அருகே த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொள்ளும் திறந்த வெளி மைதானத்தை படத்தில் காணலாம்.

## தங்கம் விலை பவுன் ரூ.1 லட்சத்தை மீண்டும் நெருங்கியது; ஒரு கிராம் ரூ.12,400 ஆனது!





மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி மதுரை கிழக்கு ( வடக்கு ) ஒன்றிய ஊராட்சியில் பூண்டி கிராமத்தில் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நியாய விலை கடையை திறந்து வைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னைகிழக்கு மாவட்ட திமுக சார்பில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஏற்பாட்டில் 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1200 நபர்களுக்கு மேல் காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டமானது வெற்றிகரமாக தொடர்ந்து 300வது நாளான , கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் கலந்துகொண்டு கொளத்தூர். 65வது வார்டு, கிழக்குத் தெரு மைதானம் சந்திப்பு மற்றும் 65அவது வார்டு, ஜெயராம் நகர் ஆகிய 2 இடங்களில் பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.



விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆனையூர் ஊராட்சியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக்குழுவின் மதி சிறுதானிய உணவகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் என்.ஓ.சுகபுத்ரா, திறந்து வைத்து பார்வையிட்டார்.

## தாய்ப்பால் குடித்த பெண் குழந்தை திடீர் சாவு! போலீஸ் விசாரணை!!

பாலக்கோடு.டிச.18

தர்மபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி பகுதியைச் சேர்ந்தவர் விஜயகுமார், டிரைவரான இவரது மனைவி இசைப்பிரியா. இவர்களுக்கு சமீபத்தில் பாப்பாரப்பட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்தது. இந்நிலையில், இசைப்பிரியா குழந்தையுடன், பெல்லுஅள்ளு பகுதியில் உள்ள பெற்றோர் வீட்டில் இருந்துள்ளார். அதிகாலையில், வழக்கம்போல் குழந்தைக்கு பால் கொடுத்துள்ளார். சிறிது நேரம் கழித்து பார்த்த போது, குழந்தை அசைவில்லாமல் இருந்துள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த இசைப்பிரியா, குழந்தையை தூக்கிக்கொண்டு அங்குள்ள அரசு ஆரம்பசுகாதாரநிலையத்துக்கு சென்றார். அங்கிருந்த மருத்துவர்கள் பரிசோதித்து பார்த்துவிட்டு குழந்தை இறந்து விட்டதாக தெரிவித்தனர். பிறந்த 29 நாட்களேயான நிலையில் பெண் குழந்தை உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து மாரண்ட அள்ளி போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## குட்கா பதுக்கி விற்ற பேக்கரி உரிமையாளர் உள்பட 2 பேர் கைது!

பவானி.டிச.18–

ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள லட்சுமி நகர் காலிங்கராயன்பாளையம் பகுதியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொரு ள்கள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில் போலீசார் ரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒதுக்குப்புறமாக இடத்தில் குடோனில் குட்கா மற்றும் புகையிலை பொருள்களை பதுக்கி வைத்து சில்லறை விற்பனைக்கு அனுப்பப்படுவது தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து போலீசார் குடோனில் நடத்திய திடீர் சோதனையில் 50 கிலோ குட்கா பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக பவானி சொக்கம்ரம்மன்நகரை சேர்ந்தவர் டேனியல் மகன் வின்செண்ட் (67) காலிங்க ராயன்பாளையம் கால்நடை மருத்துவமனை பகுதி சேர்ந்தவர் பேக்கரி உரிமையாளர்குண்ணியன்குட்டி மகன்சபிக்பாபு(39) ஆகியோரை போலீசார் கைது செய்தனர். மேலும் புகையிலை பொருள்கள் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட 2 கார்களும்பறிமுதல் செய்யப்பட்டது.

## தொழிலாளியிடம் வழிப்பறி; வாலிபருக்கு 3 ஆண்டுகள் சிறை

கோவை, டிச. 18

கோவை ஆர்எஸ் புரம் பகுதியைச் சேர்ந்தவர் சந்திரன் (46). சலவைத் தொழிலாளி. இவர் கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் தேதி விசிசி ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது, திண்டுக்கல் மாவட்டம், நில க்கோட்டையைச் சேர்ந்த சுரேஷ் (21) என்பவர் கத்தியைக் காட்டி மிரட்டி சந்திரனிடமிருந்து ரூ. 200 மற்றும் செல்போனை பறித்து சென்றார்.

இதுகுறித்த சந்திரன் ஆர்எஸ் புரம் போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து சுரேசை கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணை கோவை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கை நேற்று விசாரித்த நீதிபதி செந்தில்குமார் குற்ற ஞ்சாட்டப்பட்ட சுரேசுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.1000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அனைத்து விளையாட்டு விடுதி வீரர், வீராங்கனைகளுக்கான பயிற்சி, உடல்திறன், நல்வாழ்வு தரவுகளைக் கொண்டு செயல்திறன் பகுப்பாய்வு மற்றும் திட்டமிடுவதை அடிப்படையாக கொண்ட அத்லெட் மேலாண்மை அமைப்பை (ATHLETE MANAGEMENT SYSTEM) தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய ஜூனியர் ஆண்கள் ஹாக்கி அணியின் பயிற்சியாளர் பி. ஆர். ஸ்ரீஜேஷ், இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனை ஜி. கமாலினி, விளையாட்டுத்துறை வல்லுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமைச் செயலகத்தில், 20242025ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டி வெற்றியாளர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், சிவாடியில் உள்ள ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (HPCL) நிறுவனத்தின் தருமபுரி டெர்மினல் மற்றும் VDPL பைப்லைன் பிரிவு சார்பில், மாவட்ட நிர்வாகத்தின் ஒருங்கிணைப்புடன் "வெளிப்புற மாதிரி ஒத்திகை" நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், தலைமையில் நடைபெற்றது. உடன் தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர் பூவிதா, மாவட்ட தீயணைப்பு அலுவலர் செல்வி.ப.அம்பிகா மற்றும் காவல், தீயணைப்பு, வருவாய் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில், நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும்நாள்கூட்டத்தில்மேயர்கா.ரங்கநாயகிராமச்சந்திரன்,பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி உடனடியாக தீர்வுகான உத்தரவிட்டார். உடன் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் மதிப்பிற்குரிய துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், துணை ஆணையாளர்கள் த.குமரேசன், அ.சுல்தானா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



## புதுக்கோட்டை அரசு மருத்துவமனை சார்பில்

# அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஓவிய போட்டி!

## வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தலைமை மருத்துவர் பரிசு வழங்கி பாராட்டு!!

புதுக்கோட்டை டிச 18

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டைஅருகே அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனை சார்பில் ஆறு, ஏழு, எட்டாம் வகுப்பு பயிலும் மாண வ,மாணவிகளுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து ஓவியப் போட்டி நடைபெற்றது. இந்நிகழ் விற்கான பரிசளிப்பு விழா கந்தர்வ கோட்டை அரசு மருத்துவமனை சார்பில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்விற்குத்தலைமை ஆசிரியர்தமிழ்செல்வி வகித்தார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கந்தர் வகோட்டை அரசு தலைமை மருத்துவர் சாரதா சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப் புணர்வுகுறித்துப் பேசும்பொழுது மாணவ மாணவிகள் அனைவரும் சுற்றுச்சூழலை பாதுகாப்பது அனைவரின் கடமையா கும். சுற்றுச்சூழல் சரியாக பராமரித்தால் நோய் தொற்றிலிருந்து நம் மை பாதுகாத் துக் கொள்ள முடியும். தன் சுத்தம், சுகா தாரம் ஒவ் வொருவரும் கடைபிடிக்க வேண்டும். சுற்றுச்சூழலை பாதுகாப்பத ற்காகபல்வேறுவகையானவிழிப்புணர்வு பிரச்சாரத்தை தமிழ் நாடு அரசு மேற் கொண்டு வருகிறது.

சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதோடு உடல் நலத்தையும் சிறப் பாக பராமரிக்க மாணவ, மாணவிகள் தினந் தோறும் குளிக்க வேண்டும். துணி களைதுவைத்து பயன்படுத்த வேண்டும். உடல்நிலை சரியில்லை என்றால் உடன டியாக மருத்து வமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். எந்த நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மருத்துவ வசதிகள் தற்போது உள்ளது. சுற்றுச்சூழல் பாது காக்க காற்று ,நீர், மண் உள்ளிட்ட இயற்கை வளங்களை பாதுகாப்பது மிக முக்கியமாகும். அது மட்டுமல்லாமல் குழந்தைகளாகிய நீங்கள் சுற்றுச்சூழல் பா துகாப்பு குறித்து உங்கள் ஊரில் உங்கள் பகுதியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் , பிறந்தநாளின் போது மரக் கன்றுகளை நட்டு சுற்றுச்சூழலை பாது காக்க வேண்டும் என கேட்டுக்கொண் டார். இந்நிகழ்வில் கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக் கத்தின் கந்தர்வகோட்ட ஒன்றிய செயலா ளரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா ஒருங்கிணைத்தார்

# கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக ஓசூரில் இருந்து கேரளாவுக்கு தினமும் 2 லட்சம் ரோஜா செல்கிறது!

ஓசூர், டிச. 18–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், தளி, கெலமங்கலம், பேரிகை, பாகலூர் உள் ளிட்ட பகுதிகளில் நிலவும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை மற்றும் மண் வளம் மலர் சாகுபடிக்கு கை கொடுத்து வருகி றது. ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் பண் டிகை மற்றும் இதை யொட்டி நடைபெ றும் திருமண விழாவுக்காக கேரள மாநிலத்தில் வெள்ளை ரோஜாவுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். இதனால், ஓசூரிலிருந்து கேரளாவுக்கு ஆண்டுதோ றும் 20 லட்சம் வெள்ளை ரோஜாக்கள் விற்பனைக்கு செல்கின்றன. இதுதொடர் பாக விவசாயிகள் சிலர் கூறியதாவது: ஓசூர் பகுதியிலிருந்து ஆண்டு தோறும் கேரளாவுக்கு ஓணம் பண்டிகையின் போது வெள்ளை சாமந்திப்பூ, கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு வெள்ளை ரோஜா அதிக அளவில் விற்பனைக்குச் செல்லும். இந்தாண்டு கிறிஸ்துமஸ் பண் டிகை மற்றும் அதை யொட்டி நடைபெ றும் திருமண விழாக்களுக்காக பசுமைக் குடில்களில் 500 ஏக்கரில் வெள்ளை ரோஜாவும், 1,000 ஏக்கரில் கலர் ரோஜா வும் சாகுபடி செய்துள்ளோம். குறிப்பாக வெளிநாடுகளில் வசிக்கும் கேரள கிறிஸ் தவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகை விடுமு றைக்கு தங்கள் சொந்த ஊருக்கு வருகின் றனர். பண்டிகை மறுநாள் முதல் ஜனவரி 10ம் தேதிவரை அதிக கிறிஸ்தவ திரும ணங்கள் நடக்கும்.

இதனால், அங்குள்ள சந்தைகளில் வெள்ளை ரோஜாவுக்கு வரவேற்பு அதி கம் இருக்கும். இந்த ஆண்டு ஆர்டரின் பேரில் வரும் 20ம் தேதி முதல் தினசரி வெள்ளை ரோஜா, மேடை அலங்காரத் துக்கு வெள்ளை ஜாபரா, மலர் கொத் துக்கு வெள்ளைஜிப்சோபிலா உள்ளிட்ட 2 லட்சம் மலர்கள் அனுப்ப திட்ட மிட் டுள்ளோம். இவ்வாறு அவர்கள் தெரிவித் தனர்.

# மருந்துகளை பரிந்துரைக்கும்போது மருத்துவர்கள் பெரிய எழுத்துகளில் எழுத வேண்டும்!

## தேசிய மருத்துவ ஆணையம் உத்தரவு!!


சென்னை, டிச. 18–

நாடு முழுவதும் உள்ள அனைத்துமருத் துவ கல்லூரிகளின் டீன்களுக்கும், தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) செயலர் மருத்துவர் ராகவ் லங்கர் அனுப்பியுள்ள சுற் றறிக்கை: மருத்துவர்கள் மருந்து பரிந்து ரைச் சீட்டுகளை தெளிவாக எழுதுவது தொடர்பான பாடத்தை மருத்துவ பாடத் திட்டத்தில் சேர்ப்பது அவசியம் என்று பஞ் சாப், ஹரியாணா உயர்நீதிமன்றம் சமீபத் தில் உத்தரவிட்டிருந்தது. பாதுகாக்கப்பட வேண்டிய மருத்துவ ஆவணங்கள் தெளி வாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தி ருந்தது.அந்தஉத்தரவைகருத்தில்கொண்டு, தேசிய மருத்துவ ஆணையம் சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. அதன்படி, ஒவ்வொரு மருத்துவ கல்லூரிகளிலும், மருந்து சீட்டு நடைமுறைகளை கண்கா ணிக்க சிறப்பு துணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும். அந்த குழுவானது, நோயாளிகளுக்கு மருத்துவர்கள் எழுத்துப் பூர்வமாக வழங்கும், மருந்து பரிந்துரைகள் தெளிவாக உள்ளதா என்பதை மதிப்பிடும். அவ்வாறு இல்லாதபட்சத்தில், அதனை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை குழு மேற்கொள்ள வேண்டும். துணைக் குழு வின் இந்த பணிகள் அனைத்தையும் ஆவ ணப் படுத்துவதுடன், அதனை தேசிய மருத் துவ ஆணையம் கேட்கும்போது சமர்ப்பிக்கும் வகையில், தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பெரிய எழுத்துக ளில் புரியும்படி மூலப் பெயருடன் (ஜென ரிக்) கூடிய மருந்துகளை மருத்துவர்கள் பரிந்துரைப்பது கட்டாயம் ஆகும்.

# MSEDCL கின்னஸ் உலக சாதனை; வரலாற்றுச் சாதனையில் C.R.I. Solar பெருமையுடன் பங்கேற்றது!

சென்னை டிச 18

இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் வரலாற்றுச் சாதனையாக, மகாராஷ்டிரா மாநில மின்சார விநியோக நிறுவனம் (MSEDCL) ஒரே மாதத்தில் 45,911 சோலார் பம்பிங் சிஸ்டங்களை நிறுவி கின்னஸ் உலக சாதனையை படைத்துள்ளது. இது MSEDCL இன் தூரநோக்கு தலைமையும், திறமையான செயல்திறனும், விவசாயிகளுக்கு நீர் சீரான தீர்வுகளை வழங்கும் உறுதியான அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறது.



C.R.I. Solar, மகாராஷ்டிராவின் 1,686 கிராமங்களில் சோலார் பம்புகளை நிறுவி ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நிலைத்த நீர்வழங்கும் தீர்வுகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகித்தது. ஒவ்வொரு நிறுவலும் துல்லியத்துடன், ஒருங்கி ணைந்த குழுப் பணியுடன் நிறைவேற்றப்பட்டது, இதுC.R.I.இன்சிறப்பானதிறன்களைவெளிப்படுத்துகிறது. இந்த சாதனையை முன்னிட்டு C.R.I. குழுமத் தலைவர் திரு. ஜி. சௌந்தரராஜன் கூறியதாவது: "இந்த கின்னஸ் உலக சாதனை ஒரு குறிப்பிடத்தக்க சாதனையை விட அதிகமாக பிரதிபலிக்கிறது — இது தேசிய பெருமையும், இந்தியாவின் தூய்மையான எரிசக்தி பயணத்தின் மைல்கல்லும் ஆகும். MSEDCLக்கு நன்றி தெரிவித்து, இந்தியாவின்எதிர்கால எரிசக்தி தீர்வுகளை முன்னெடுத்துச் செல்லும் பணியில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்."

# "AI திட்டங்களின் வெற்றிக்கான முதன்மை தரவு அமைப்புகளை நவீனப்படுத்துவது: இந்திய தொழில்நுட்பத் தலைவர்களின் 89% கருத்து"!

சென்னை டிச 18

சேல்ஸ்ஃபோர்ஸ் வெளியிட்டுள்ள State of Data & Analytics அறிக்கையில், இந்தியாவில் 89% டேட்டா மற்றும் அனலிட் டிக்ஸ் தலைவர்கள், AI மூலம் உண்மையான பலன்கள் பெற தரவு அமைப்புகளை நவீனமாக்க வேண்டும் என்று உறுதி யாக நம்புகிறார்கள். வணிகத் தலைவர்களில் 75% பேர், தரவு எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், காலாவதி யான மற்றும் தரமற்ற தரவு அவர்கள் எதிர்பார்க்கும் முடிவு களை அடைய விடாமல் தடுப்பதாக கூறியுள்ளனர். அதிக ஆபத்தானதாக, 26% டேட்டா அண்ட் அனலிட்டிக்ஸ் தலை வர்களில் 75% பேர், அதில் முக்கியமான வணிக முடிவுகள் உள்ள தரவுகள் அணுக முடியாத நிலையில் இருக்கின்றன என்று நம்புகிறார்கள். AI மற்றும் ZeroCopy Integration சேல்ஸ்ஃபோர்ஸ் இந்தியாவின் சொல்யூஷன் இன்ஜினிய ரிங் துணைத் தலைவர் தீப்பு சாக்கோ, AI மூலம் பெரும்பா லான துறைகளில் புரட்சியைக் கொண்டு வர முடியும் என் றும், தரவு நவீனப்படுத்தலுக்குப் பொறுப்பானவர்கள்தான் எதிர்கால தலைவர்கள் ஆவார்கள் என்றும் தெரிவித்துள் ளார். ZeroCopy Data Integration என்ற புதிய முறையைப் பயன் படுத்தி, 52% நிறுவனங்கள் தரவை ஒன்றாக இணைக்க 40% அதிக வாய்ப்பு பெற்றுள்ளன. இது AI முயற்சிகளில் வெற் றிபெறுவதற்கு 22% கூடுதல் வாய்ப்பு அளிக்கின்றது.

# மலேசியா–இந்தியா உயர்கல்வி உறவுகளை வலுப்படுத்தும் MAHEF 2025–இந்தியா!



சென்னை டிச 18

இந்த மாநாடு "உலக தெற்கு நாடுகளின் அஜெண்டா சூழ லில் சர்வதேசமயத்தை வலுப் படுத்துதல்" என்று நோக்க மாக கொண்டது . MAHEF 2025–இந்தியா மலேசியா வின் உயர்கல்வி தொடர்புகள் மற்றும் எல்லை தாண்டிய கல்வி முயற்சிகளில் ஒரு முக்கிய கட்டமாக இருந்தது, மலேசியா–இந்தியா நட்புகளை வலுப்படுத்தியது. "உலக தெற்கு நாடுகளின் அஜெண்டா சூழலில் சர்வதேசமயத்தை வலுப்படுத்துதல்" என்ற கருப்பொருளுடன், இந்த மாநாட் டின் நோக்கம் மலேசியா மற்றும் இந்தியா இடையிலான உயர்கல்வி ஒத்துழைப்பை ஆழப்படுத்துதல், கூட்டு ஆராய்ச்சி மற்றும் புதுமை முயற்சிகள் விரிவுபடுத்துதல், மற்றும் இரு நாடுகளின் மாணவர், கல்வியாளர் மற்றும் திற னாளி பரிமாற்றத்தை ஊக்குவிப்பதாக இருந்தது. "மேலும் ஆராய்ச்சியாளர்களுடனும், இரு நாடுகளுக்கிடையேயான அறிவு பரிமாற்றத்தை தொடரவும் நீண்டகால கல்வி ஒத்து ழைப்பை மேம்படுத்தவும் இது உதவுகிறது," என்று தென் இந்தியாவிற்கானமலேசியாதுணைத்தூதரானமாண்புமிகு K. சரவணகுமார் தெரிவித்தார். EMGS தலைமை நிர்வாக அதிகாரி நோவி தாஜுடின் சேர்த்து கூறினார்: "மலேசியா பல்கலைக்கழகங்களும் தொழில் துறையுடன் வலுவான ஒத்துழைப்பை விரிவுபடுத்தி வருகின்றன. இந்திய மாண வர்களும் Graduate Pass போன்ற வாய்ப்புகளைப் பயன்ப டுத்தி மலேசியாவில் கல்வி கற்று, பணியாற்றி, தங்கள் படிப்பை தொடரலாம்." மலேசியாவில் தற்போது 180க்கும்mal மேற்பட்ட நாடுகளில் இருந்து 1,50,000க்கும் மேற்பட்ட சர்வதேச மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்கள் கல்வி கட்டணங்கள், வாழ்க்கைச் செலவுகள் மற் றும் நீண்டகால திறனாளி வளர்ச்சி ஆகியவற்றின் மூலம் ஆண்டுதோறும் நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமார்RM16 பில்லியன் அளவுக்கு பங்களிப்பை வழங்குகின்றது.

# "நல்ல தேர்வு, எளிய நாளுக்கு — அமீர் கானுடன் பிரிட்டானியா நியூட்ரிசாய்ஸ்!"



நெல்லை டிச.18

இந்தியா முழுவதும் மக் களின் அன்றாட சிறிய முடி வுகளைப் பற்றிய புதிய உரையாடலைத்தொடங்க, பிரிட்டானியா நியூட்ரி சாய்ஸ் தனது புதிய பிரச்சா ரத்தை அறிமுகப்படுத்தி யுள்ளது. "ஒரு நல்ல விஷயத்தை தேர்வு செய்வது அடுத்த விஷயத்தை எளிதாக்குகிறது" என்ற மையக்கருத்தை அடிப் படையாகக் கொண்டு, இந்த யோசனை அன்றாடத்தில் எடுக்கப்படும் சிறிய நல்ல தேர்வுகள் – தேநீரில் சர்க்கரை தவிர்ப்பது போன்றவை – நாளின் போக்கையே நேர்மறை யாக மாற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த சிந்தனையை அழகாக வெளிப்படுத்த அமீர் கான் தனது இயல்பானநகைச்சுவைமற்றும்நேர்த்தியுடன்பிரச்சாரத்தில் உயிர் ஊட்டுகிறார். லோவ் லிண்டாஸ் உருவாக்கிய இந்த பிரச்சாரம், நல்ல தேர்வுகள் மனநிலையை எவ்வாறு சுலப மாக மாற்றி தொடர்ந்து நல்ல முடிவுகளுக்குத் தள்ளுகின் றன என்பதை நிஜ வாழ்க்கை தருணங்கள் மூலம் காட்டுகி றது. இந்த பின்னணியில், நியூட்ரிசாய்ஸ் தனது பரந்த போர்ட்ஃபோலியோவில் உள்ள 100% ஆட்டா & மைதா இல்லாத டைஜஸ்டிவ், ஓட்ஸ் & மில்லெட் குக்கீகள்★ போன்ற ஆரோக்கியமான விருப்பங்களை முன்னிறுத்துகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகை யில், பிராண்ட் புதிய 100% மில்லெட்ஸ் ஆப்பிள் சின்னமன் குக்கீகளை★ அறிமுகப்படுத்தியுள்ளது. ₹55க்கு கிடைக் கும் இந்த தயாரிப்பு, அன்றாட பரிச்சயமான ஸ்நாக்ஸ் தரு ணங்களில் நல்ல தேர்வை எளிதாக்கும் நோக்கத்துடன், நுகர்வோரின் evolving snack habitsக்கு பொருத்தமாக உருவாக் கப்பட்டுள்ளது.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, மூலனூர் மேற்கு ஒன்றியம், கிளாங்குண்டல் ஊராட்சி, பட்டுத்துறையில் வாக்குச்சாவடி எண்.287 மற்றும் 288 ஆகிய வாக்குச்சாவடிகளில்"தமிழ்நாடுதலைகுனியாதுஎன்வாக்குச்சாவடி,வெற்றிவாக்குச்சாவடி" என்ற தலைப்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டார்.



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவர், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) நிறைமதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆனந்தகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மணிமேகலை ஆகியோர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகிற 20–ந் தேதி நெல்லை வருகிறார். அவர் திறந்து வைக்கும் பொருநை அருங்காட்சியத்தின் அழகிய தோற்றத்தை படத்தில் காணலாம்.



கோவை மாநகராட்சி பொது சுகாதார குழு மற்றும் சுற்றுச்சூழல் ஆலோசனை கூட்டம் கோவை விமான நிலையத்தில் நடைபெற்றது. இதில் பொது சுகாதார குழு தலைவர் மாரிச்செல்வன், விமான நிலைய இயக்குனர் முகமது ஆரிப் ஆகியோர் பேசினர்.

# ஜனவரி முதல் வாரத்தில் தமிழக சட்டசபை கூட்டம்;கவர்னர் உரை நிகழ்த்துவார்!

சென்னை, டிச.18

தமிழக சட்டசபை கூட்டம் ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்ப டுகிறது. ஆண்டின் முதல் கூட்டம் என்ப தால் கவர்னர் உரையாற்றுவார்.

தமிழக சட்டசபை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் வாரத்தில் கூட்டப்படுவது வழக்கம். ஆண்டின் முதலாவது கூட்டம் என்பதால் இதில் ஆளுநரும் உரை நிகழ்த்து வார். அந்த உரையில் அரசின் கொள்கை மற் றும் செயல் திட்டங்கள் இடம்பெற்றிருக் கும். கடைசியாகதமிழகசட்டசபை கூட்டம் அக்டோபர் 14–ஆம் தேதி தொடங்கி 17–ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தக் கூட் டத்தில் 16 மசோதாக்கள் நிறை வேற்றப்பட் டன. அதன் பிறகு சபை முடித்து வைக்கப்பட்டது. இந்த நிலை யில் 2026–ஆம் ஆண்டுக்கான முதலாவது கூட்டம் ஜனவரி முதல் வாரத்தில் தொடங் கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது ஜனவரி 5 அல்லது 6–ஆம் தேதி தொடங்கப்படலாம் என கூறப்படுகிறது. இந்தக் கூட்டம் குறைந்த நாட்களே நடக்கும். இதில்ஆளுநர்ஆர்.என்.ரவிஉரைநிகழ்த்துவார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்கூடுவாஞ்சேரி நகராட்சி அரசு நடுநிலைப் பள்ளியில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், கூடுவாஞ்சேரி நகர்மன்றத் தலைவர் எம்.கே. டி.கார்த்திக் தண்டபானி, பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மாணவ மாணவிகள் உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் சந்திரகலா தலைமையில் தேசிய நெடுஞ்சாலை பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் அவரது அலுவலகத்தில் நடநதது. உடன் டி ஆர் ஓக்கள் கௌசல்யா, .பாபு, தேசிய நெடுஞ்சாலை உதவி செயற்பொறியாளர் ஜெயக்குமார் மற்றும் அலுவலர்கள் இருந்தனர்

## உத்திரமேரூர் ஒன்றியம் கடல் மங்கலம் ஊராட்சியில் வெற்றி வாக்குச்சாவடி சிறப்பு பரப்புரை தேர்தல் ஆலோசனைக் கூட்டம்!



காஞ்சிபுரம்,டிச.18

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர்கள் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர்.க.சுந்தர் ஆணைக்கிணங்க உத்திரமேரூர் ஒன்றியம் கடல் மங்கலம் ஊராட்சியில் வாக்குச்சாவடி பாக எண் 235 ல்என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி சிறப்பு பரப்புரை தேர்தல் ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஒன்றிய கவுன்சிலர் கெ. ஞானசேகரன்

கலந்துகொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தேர்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் கடல் மங்கலம் ஊராட்சியில் பாக எண் 235 ல் உள்ள BLA2,BLC,BDO, கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும்கலந்து கொண்டனர்

ஒன்றிய செயலாளர் ஞானசேகரன் முகவரிடம் திமுக அரசின் சாதனை விலைக்கு உதயசூரியனுக்கு வாக்கு சேகரிக்க வேண்டும் கூடுதலான வாக்கு பெற வேண்டும் குறித்த வழிமுறைகளை ஆலோசனையாக வழங்கினார் இந்நிகழ்ச்சியில் கடல் மங்கலம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வீராசாமி ஒன்றிய கவுன்சிலர். தயாளன் மாயகிருஷ்ணன் மருத்துவம் பாடி ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆதிநாராயணன் சரவணன் மாவட்ட தகவல் தொழில்நுட்பு துணை அமைப்பாளர் சண்முகம் பேச்சாளர் தினகரன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதி நிதிகள் ஏராளமான கலந்து கொண்டனர்

## ஆகாயத்தாமரை கைவினைப் பயிற்சி நிறைவு விழா!



சிதம்பரம், டிச .18

ஆகாயத்தாமரை தண்டுகளிலிருந்து கைவினைப்பொருள்கள்தயாரிக்கும்பயிற்சியின் நிறைவு விழா சிதம்பரம் கிரீடு தொண்டு நிறுவன பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

ஆகாயத்தாமரை தண்டுகளிலிருந்து கைவினைப் பொருள்கள் தயாரிக்கும் இரண்டு வார பயிற்சி நிறைவு பெற்றது. கிரீடு தொண்டு நிறுவனம் மற்றும் ஹோப் நிறுவனம் இணைந்து நடத்திய பயிற்சியின் நிறைவு விழாவிற்கு வந்திருந்தவர்களை கிரீடு தொண்டு நிறுவன மேலாளர் நீலகண்டன் வரவேற்றார்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கடல்வாழ் உயிரியல் உயராய்வு மைய இயக்குனர் பேராசிரியர் முனைவர் ராமநாதன் சிறப்புரை ஆற்றுகையில், நமது பகுதியில் இலவசமாக, அதிக அளவில் கிடைக்கும் ஆகாயத் தாமரையை பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு பயன்படுத்தும் இரண்டு தொண்டு நிறுவனங்களையும் பாராட்டினார். இந்த முயற்சிக்கு தன்னாலான ஆதரவை வழங்குவதாக உறுதி அளித்தார்.

கிரீடு தொண்டு நிறுவனத் தலைவர் முனைவர் வி.நடனசபாபதி தலைமையுரை ஆற்றுகையில், பெண்கள் மாதம் முப்பதாயிரம் வரை வருமானம் பெற கைத்தொழில்களை கற்றுக்கொண்டு, தொழிலினை செய்து, சந்தைப்படுத்துதல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

புதுச்சேரி ஹோப் நிறுவன இயக்குனர் ஜோசப் விக்டர் ராஜ் பேசுகையில், 2023 ஆம் ஆண்டு முதல், ஹோப் நிறுவனம் ஆகாயத்தாமரை தண்டுகளிலிருந்து கைவினைப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சிகளை நடத்தி வருகிறது. நீர்வாழ் களையை, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் கலைப் பொருட்களாக மாற்றுவதன் மூலம் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது; பெண்களின் திறனும், வருமானமும் மேம்படுகிறது என்று குறிப்பிட்டார்.

மேலும் பயிற்சியில் பங்கேற்ற 35 மகளிர்க்கும் சான்றிதழ்களும், ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டன. பயிற்சியில் பயிற்றுனர்களான பங்கேற்ற புதுச்சேரி பாகூரை சேர்ந்த ஆனந்தி, சுமதி மற்றும் ராஜலக்ஷ்மி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.முடிவில் கிரீடு அலுவலர் கவிதா நன்றி கூறினார்



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகைப்பட கண்காட்சியினை பொது மக்கள் பார்வையிட்டனர்.

## நமது மக்கள் முன்னேற்ற கழகத்தின் நிறுவனர் ஜெகநாத் மிஸ்ரா முன்னிலையில் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி இணையும் விழா!



கம்பம்,டிச.18

தேனி மாவட்டம் கம்பத்தில் நமது மக்கள் முன்னேற்ற கழகத்தின் நிறுவன தலைவர் பி .எல். ஏ.ஜெகநாத் மிஸ்ரா முன்னிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து விலகி இணையும் விழா அங்குள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு,கம்பம் நகர செயலாளர்கள் அய்யர்,சுப்பிரமணி ஆகியோர் தலைமை தாங்கினார்கள். கம்பம் தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சையது அபுதாஹிர், கம்ப நகர இளைஞரணி செயலாளர் அப்ரிடி அகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கட்சியின் நிறுவனத் தலைவர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா.முன்னிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து விலகி நமது மக்கள் முன்னேற்றக் கழகத்தில் இளைஞர்கள் 500 பேர் இணைந்தனர்.

புதிய நிர்வாகிகளை வரவேற்று ஜெகநாத் மிஸ்ரா பேசியதாவது, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நமது மக்கள் முன்னேற்ற கழகம் தவிர்க்க முடியாத சக்தியாக இருக்கும்.தமிழக முழுவதும் 234 தொகுதிகளிலும் வலுவான கட்டமைப்பை அமைத்துள்ளோம்.

குறிப்பாக தென் மாவட்டங்களில் 25 தொகுதிகளில் வாக்குச்சாவடி முகவர்கள் அமைக்கப்பட்டு அதற்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம். இந்த மண்ணையும் மக்களையும் காக்க

நமது மக்கள் முன்னேற்ற கழகம் பாடுபடும். இது மக்களுக்கான கட்சி அதுதான் நமது மக்கள் முன்னேற்ற கழகம்.நாங்கள் இடம்பெறுகின்ற கூட்டணி தான் மகத்தான வெற்றி பெறும் அதற்கான பணிகளை தொடங்கி விட்டோம் என்று ஆவேசமாக பேசினார். கட்சியில் இணைந்த நிர்வாகிகளுக்கு துணைப் பொதுச் செயலாளர் செல்வேந்திரன் சால்வை. அணிவித்து வரவேற்றார். மாநில வியாபாரிகள் அணிச் செயலாளர் பன்னீர்செல்வம்,

மாநில போக்குவரத்து பிரிவு அமைப்பாளர் நந்தகுமார்,கம்பம் தொகுதி செயலாளர் அபுதாகிர்,மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் அருண்குமார்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கப்பாண்டி, மாநில மகளிர் அணி துணை அமைப்பாளர் லதா அறிவழகன்,மாவட்ட மகளிர் அணி செயலாளர் கிருஷ்ணவேணி, மற்று நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ராஜபாளையத்தில்

## மார்கழி 1 சஞ்சீவி மலையில் படி பூஜை செய்து வழிபாடு!



ராஜபாளையம் டிச.18

மாதங்களிலே சிறந்த மாதம் மார்கழி மாதமாகும். இந்த மார்கழி மாத முதல் தேதியில் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பூசப்பாடி தாயாதியர் கந்தசாமி ராஜா வகையறா சார்பில் ராஜபாளையம் கிழக்கு அரணாக விளங்கும் சஞ்சீவி மலையில் 365 படிகளுக்கும் சிறப்பு பூஜை நடத்தி படி பூஜை செய்து வழிபாடு செய்வது வழக்கம். நூறாண்டு காலமாக இந்த பூஜை வழிபாடு செய்து வரும் இந்த வகையறா சார்பில் இந்த ஆண்டும் மார்கழி மாத படி பூஜை சிறப்பாக நடத்தப்பட்டது. பூஜை கமிட்டி தலைவர் பிரதாப் ராஜா தலைமையில், வனச்சரகர் சரண்யா

மற்றும் செயலாளர் அழகராஜா முன்னிலையில், பொருளாளர் கணேஷ் ராம், துணைச் செயலாளர் ராமராஜ் உள்பட ஏராளமான பெண்கள் மற்றும் பலர் வழிபாட்டில் கலந்து கொண்டனர். வில்லாளி வீரன் பஜனை குழு சார்பில் முத்துராமலிங்க சுவாமிகள் தலைமையில் பஜனை கோஷ்டியினர் பஜனை பாடல்கள் பாடி படிபூஜை வழி நடத்தி வைத்தனர். சஞ்சீவி மலையில் உள்ள 365 படிகளுக்கும் சூடம், பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு வைத்து வழிபாடு செய்து வணங்கினார்கள். பின்னர் மதியம் சஞ்சீவி மலை உச்சியில் உள்ள அருள்மிகு குமாரசாமிக்கு சிறப்பு வழிபாடு நடத்தி சிறப்பு அன்னதானமும் வழங்கப்பட்டது. ஏராளமான பொதுமக்கள் பெண்கள் கலந்து கொண்டனர்.



## சிதம்பரம் வீனஸ் மழலையர், தொடக்கப்பள்ளியில் கிறிஸ்துமஸ் பண்டிகை உற்சாக கொண்டாட்டம்!

சிதம்பரம் டிச.18

சிதம்பரம் வீனஸ் மழலையர் பள்ளியில் இயேசு கிறிஸ்துவின் பிறந்தநாளை நினைவு கூறும் வகையில் கிறிஸ்துமஸ் பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் தாளாளர் சா.குமார், துணைத் தாளாளர் திருமதி.ஏ.ரூபியால் ராணி மற்றும் பள்ளியின் முதல்வர் திரு.எஸ்.லியோ பெஸ்கிராவ் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக நிர்வாக இயக்குநர் திரு.வே. அருண் மற்றும் திருமதி.கு.லியோனா அருண் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரி வித்து இவ்விழாவை சிறப்பித்தனர். கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு பள்ளி வளாகம் முழுவதும் கிறிஸ்துமஸ் மரங்கள், நட்சத்திரங்கள் மற்றும் வண்ண விளக்குகளால் அழகாக அலங்கரிக்கப்பட்டது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமிட்டும், சான்டா கிளாஸ் தொப்பி அணிந்தும்; கிறிஸ்துமஸ் பாடல்களை பாடி விழாவை உற்சாகமாக கொண்டாடினர். இந்த விழா மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மகிழ்ச்சியான அனுபவமாக அமைந்து, அனைவரின் மனதிலும் இனிய நினைவுகளை ஏற்படுத்தியது. பின்னர் கிறிஸ்துமஸ் தாத்தா அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பகலில் நல்ல வெயிலும் மாலை வேளையில் கடும் குளிர் நிலவி வருகிறது டிசம்பர் இறுதி வாரத்தில் துவங்கிய உறை பனி தற்போது வரை நீடித்து வருகிறது .



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை. அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக காவல்துறை அலுவலர்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான ஒரு நாள் திறன் வளர்ப்பு பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது. உடன் அரியலூர் விரைவு மகளிர் நீதிமன்றம். மாவட்ட நீதிபதி மணிமேகலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி மற்றும் பலர் உள்ளனர்.

## திருவள்ளூர் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை அமைச்சர் சாமு நாசர் வழங்கினார்!



திருவள்ளூர் டிச.18

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கு விழாவில் திருவள்ளூர் உள்ளிட்ட 4 மாவட்டங் களில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்

திருவள்ளூர் தனியார் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் சாமு நாசர் காணொளி காட்சி வாயிலாக பார்வையிட்டு கலைஞர் விளையாட்டு உபகரணங் கள் அடங்கிய 555 தொகுப்புகளை ஆவடி மாநகராட்சி 1 நகராட்சிகள் 6 பேரூராட்சிகள் 8 பகுதிகளைச் சேர்ந்த 318 நகர்ப்புற வார்டுகளுக்கு வழங்கினார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு பிரதாப் சட்டமன்ற உறுப்பினர்கள் விஜி ராஜேந்திரன் எஸ் சந்திரன் டிஜே கோவிந்தராஜன் துரை சந்திரசேகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தா சுக்லா ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா மேயர் உதயகுமார் ஆவடி மாநகராட்சி வருவாய் உதவி அலுவலர்கள் நந்தகுமார் பென்சில் ஜயா பேரூராட்சிகள் மண்டல உதவி இயக்குனர் ஜெயக்குமார் உதவி செயற்பொறியாளர் சரவணன் செயல் அலுவலர்கள் பாஸ்கரன் சதீஷ் அபூபக்கர் ராஜ்குமார் மகேஸ்வரி ஹரிகர கார்த்திகேயன் (ம) இளநிலை பொறியாளர்கள் மகேந்திரன் முத்து திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தாமோதரன் பணிமேற்பார்வையாளர் சீனிவாசன் முதன்மை கல்வி அலுவலர் கற்பகம் மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் சேது ராஜன் (ம) விளையாட்டு பயிற்றுநர்கள் திரளான விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொண்டனர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்புகளில் கிரிக்கெட் மட்டை கிட் பேக் பந்து டென்னிஸ் பந்து கைப்பந்து வலை கால் பம்ப் கால் பந்து கோல் கீப்பர் கையுறைகள் சிலம்பக்குச்சிகள் சதுரங்க பலகை கேரம் போர்டு நாணயங்கள் பிளாஸ்டிக் அளவிடும் நாடா 50 மீ கூம்புகள் அச்சிடப்பட்ட தொப்பி மற்ற பொருட்களை வைப்பதற்கான கிட் பேக் டி ஷர்ட் ஸ்கிப்பிங் கயிறு கெட்டில் பெல்ஸ் 2 கிலோ டெம்பில்ஸ் 1 கிலோ சுறுசுறுப்பு ஏணி உள்ளிட்ட 30 பொருட்கள் உள்ளது என அமைச்சர் நாசர் கூறினார்



தென் மண்டல சமத்துவ மக்கள் கழகம், நாடார் பேரவை சார்பில் ராமநாதபுரத்தில் நடந்த 2026 சட்டமன்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டத்தில்.சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் நாராயணன் பேசினார்.

## ஊட்டி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மலிவு விலையில் உணவகம் திறக்க வலியுறுத்தி இந்து முன்னணியினர் ஆட்சியரிடம் மனு!



ஊட்டி,டிச.18

உதகையிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மலிவுவிலையில் உணவகம் திறக்க வலியுறுத்தி இந்து முன்னணியினர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

ஒரு திறக்கப்பட்டுள்ள உணவகத்தில் இரு மடங்கு விலை உயர்வு இருப்பதால் உடனடியாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அம்மா உணவகங்களை போல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் உணவகம் கொண்டு வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நாள்தோறும் ஏராளமான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். இந்தப் பகுதியில் உணவகம் இல்லாமல் ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள பிங்கர் போஸ்ட் பகுதிக்கு பொதுமக்கள் சென்றும் நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக உணவகம் ஒன்று திறக்கப்பட்டடுள்ளது. ஆனால் அந்த உணவகத்தில் உணவுகளின் விலை உயர்வு அதிகமாக உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குறிப்பாக டீ 15 ரூபாயும் , 4 இட்லி 80 ரூபாயும் பலகார வகைகள் 15 ரூபாய் எனவும் வெரைட்டி சாத வகைகள் 80 ரூபாய் என விலை பட்டியலிட்டப்பட்டுள்ளது பொதுமக்களை முகம் சுளிக்க வைத்துள்ளது. நோயாளிகள் மட்டுமின்றி உறவினர்களும் உணவுகளின் விலை ஏற்றத்தால் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மலிவு விலை உணவகத்தை திறக்க வேண்டும் எனவும் ஏற்கனவே பழைய அரசு மருத்துவமனை அருகில் அம்மா உணவகம் செயல்ப்பட்டு வந்தது. இதனால் மலிவு விலையில் உணவுகள் கிடைத்ததால் பொதுமக்கள் பயன் பெற்று வந்தனர். ஆனால் தற்போது புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திறக்கப்பட்டுள்ள உணவகத்தின் உணவுகளின் விலை இரு மடங்காக உள்ளதால் அரசும் மாவட்ட நிர்வாகமும் உடனடியாக மலிவு விலை உணவகத்தை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொண்டு வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில், நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் அவர்கள், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி உடனடியாக தீர்வுகான உத்தரவிட்டார். உடன் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் மதிப்பிற்குரிய துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், துணை ஆணையாளர்கள் த.குமரேசன், அ.சுல்தானா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.




# ஊட்டியில் கம்யூனிஸ்டு கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

ஊட்டி, டிச.18–

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் நடந்த போராட்டத்தில் மாநில செயலாளர் பி.சண்முகம் பங்கேற்றார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கூடலூரில் வசிக்கக்கூடிய மக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நீலகிரி மாவட்டம் குறிப்பாக கூடலூரில் பல தலைமுறைகளாக மக்கள் வீடுகளுக்கு மின் இணைப்பு இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். உச்ச நீதிமன்றம் மின் இணைப்பு வழங்க வேண்டும் என தீர்ப்பு அளித்துள்ள நிலையில், தமிழ்நாடு அரசு அமல்ப டுத்தவில்லை. மலைப்பகுதி மட்டுமல்லாமல் சமவெளிப்பகுதிகளிலும் நீர்நிலை புறம்போக்கு, பட்டா இல்லாமல் வசிப்பவர்களுக்கு மின் இணைப்பு தர முடியாது என அரசு கூறி வருகிறது. மின் இணைப்பு வழங்காமல் இருப்பதற்கு எந்த காரணமும் இல்லை. குழந்தைகள் படிக்க வேண்டும். எனவே, அரசின் இந்த நடவடிக்கையை நியாயப்படுத்த முடியாது.

வன விலங்குகளால் தாக்கி உயிரிழந்தவர்கள், பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படாமல் உள்ளது. நிலுவையில் உள்ளவர்களுக்கு உடனடியாக சிறப்பு முகாம் போட்டு ஒரே நாளில் இழப்பீடு வழங்க வேண்டும்.

வனத்துறை, வன உரிமை சட்டம் 2006ன் படி நீலகிரி மாவட்டத்தில் வனத்தில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க முன் வரவேண்டும். இந்த சட்டத்தை தமிழ்நாடு அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மத்திய அரசு நூறு நாள் வேலை உறுதி சட்டத்தை மாற்றியுள்ளது. இதே போல வன உரிமை சட்டமும் மாற்றப்பட்டால், பழங்குடியினர் மற்றும் வனத்தில் உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

வன உரிமை சட்டத்தின் வாய்ப்பை அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதன் மூலம் அடிப்படை உரிமைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

பாஜக அரசு மக்களுக்கு விரோதமான சட்டங்களை அமல்படுத்தியும், மக்களுக்குசாதகமானசட்டங்களைதீர்த்துவது என மோசமான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.



கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர் ஊராட்சி ஒன்றியம், காடம்பாடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனைகள் மற்றும்திட்டங்கள்குறித்தசிறுபுகைப்படகண்காட்சியினைபொதுமக்கள்பார்வையிட்டனர்

# பூந்தமல்லி-போரூர் இடையே 6 நிமிடங்களுக்கு ஒருமுறை ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரெயில்!

## ஜனவரி முதல் இயக்கப்படும் என அதிகாரிகள் தகவல்!!

சென்னை, டிச.18

மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்தில், பூந்தமல்லி முதல் போரூர் வரையிலான 9 கிலோமீட்டர் வழித்தடத்தில்,வரும் ஜனவரி2026 முதல் ரெயில்கள் இயக்கப்படும். இந்த வழித்தடத்தில், உச்ச நேரங்களில் ஆறு நிமிடங்களுக்கு ஒருமுறை ரெயில்கள் பயணிகளை ஏற்றிச் செல்லும். இதற்காக, 13 மூன்றுகோச் ரெயில்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும், சுமார் 30 ரெயில் ஓட்டுநர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்த ரெயில்கள் ஓட்டுநர் இல்லாமலேயே இயங்கும் தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டிருந்தாலும், உடனடியாக அந்த முறைக்கு மாறாமல், படிப்படியாக ஓட்டுநர் இல்லா இயக்கத்திற்கு மாறுவதற்கு நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து மெட்ரோ அதிகாரிகள் கூறியதாவது:–

தற்போது பயன்பாட்டில் உள்ள முதல் கட்ட மற்றும் அதன் நீட்டிப்பு வழித்தடங்களில், அதாவது 54 கிலோமீட்டர் தூரத்தில், 45நான்குகோச் ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடங்களிலும் உச்ச நேரங்களில் ஆறு நிமிடங்களுக்கு ஒருமுறை ரெயில்கள் இயக்கப்படுகின்றன. குறிப்பாக, வண்ணாரப்பேட்டை முதல் ஆலந்தூர் வரையிலான குறுகிய வழித்தடத்தில்3 நிமிடங்களுக்கு ஒருமுறை ரெயில்கள் இயக்கப்படுகின்றன. அதே சென்னை சென்ட்ரல் முதல் சென்னை விமான நிலையம் மற்றும் சென்னை சென்ட்ரல் முதல் செயின்ட் தாமஸ் மவுண்ட் வரையிலான நீண்ட வழித்தடங்களில் 12 நிமிடங்களுக்கு ஒருமுறை ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

இதற்கிடையில், ரெயில்வே வாரியத்திடம் இருந்து ஒழுங்குமுறை ஒப்புதல் கிடைத்த பின்னரே, அடுத்தகட்ட பாதுகாப்பு அனுமதிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். குறிப்பாக, பூந்தமல்லி மற்றும் போரூர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இது பெரும் பயனுள்ளதாக இருக்கும். வகையில் ஓட்டுநர் இல்லா ரெயில் இயக்கப்படஉள்ளது.எனவேபூந்தமல்லி–போரூர் பாதையில், உச்ச நேரங்களில் ஒவ்வொரு ஆறு நிமிடங்களுக்கும் ஒரு முறை ரெயில்களை இயக்க திட்டமிட்டுள்ளது. வரும் ஜனவ முதல் பூந்தமல்லி முதல் போரூர் வரையிலான ஒன்பது கி.மீ நீள பாதையில் பூந்த ல்லி முதல் போரூர் வழியாக லைட் ஹவுஸ் வரை)ரெயில்கள் இயங்கத் தொடங்கும்.இவ்வாறு கூறினார் .

# கூட்டுறவு பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்பு!

கோவை,டிச.18–

கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான 3 நாட்கள் பயிற்சி தொடங்கி 17.12. 2025 வரை கோயமுத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகத்தில் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பினை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் ராமகிருஷ்ணன் மற்றும் மண்டல இணைப்பதிவாளர் அழகிரி துவக்கி வைக்கப்பட்டது. இப்பயிற்சியில் கூட்டுறவின் செயல்பாடுகள், கணிணிமயமாக்குதல், கூட்டுறவு சட்டம் மற்றும் விதிகளில் சமீபத்திய திருத்தங்கள், தணிக்கை, வருமானவரி, சரக்கு சேவை வரி, சி. ஆர்.ஏ.ஆர்., என்.பி.ஏ. உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. துவக்க விழாவில் கோவை சரகதுணைப்பதிவாளர் தினேஷ்குமார், பொள்ளாச்சி சரக துணைப்பதிவாளர் என்.வடிவேல் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# கோவில் அருகே சர்ச் கட்ட மக்கள் எதிர்ப்பு!



ஈரோடு,டிச.18–

ஈரோடு மாநகராட்சி, வார்டு எண்9, குபேர் நகர், ஸ்ரீகிருஷ்ணா நகர், ஆறு படையான் நகர், அடு க்குப்பாறை பகுதி சின்ன மாரியம்மன் கோவில் நலச்சங்கம் சார்பில், ஈரோடு கலெக்டர் கந்தசாமியிடம் மனு வழங்கி கூறியதாவது:

இப்பகுதியில்,500க்கும்மேற்பட்டோர்வசிக்கிறோம். ஹிந்துக்கள் அதிகம் வசிப்பதுடன், சின்ன மாரியம்மன் கோவில் பல ஆண்டுக்கு முன் கட்டப்பட்டு வழிபாடு செய்து வருகிறோம். தற்போது அதன் அருகே சர்ச் கட்டும் பணி நடந்து வருகிறது.

சாலையை மறித்தும், அவ்வழியாக யாரும் வர இயலாத வகையிலும் அமைக்கின்றனர். இதனால் போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. எனவே அவ்விடத்தில் சர்ச் கட்ட அனுமதிக்கக்கூடாது. சாலையை மறிப்பதையும் தடுக்க வேண்டும். இவ்வாறு கூறினர்.

# தொழிலதிபர் கடத்தல் வழக்கில் 2 பேர் கைது!

தாளவாடி,டிச.18–

ஈரோடு மாவட்டம்தாளவாடியை சேர்ந்தவர்கிஷோர் குமார், (36). தொழிலதிபரான இவர் பல்வேறு தொழில் செய்கிறார். கடந்த, 3ம் தேதி இரவு கடையை அடைத்து விட்டு நடைபயிற்சி சென்றவர் கடத்தப்பட்டார்.

தாளவாடி போலீசார் தேடியபோது, 5ம் தேதி காலை கும்பாரண்டி என்ற இடத்தில் காரில் வந்த கும்பல் கிஷோர்குமாரை இறக்கிவிட்டு தப்பினர். கும்பல் தாக்கியதில் காயமடைந்த கிஷோர்குமார் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். காரில் கடத்திய கும்பல், முகத்தை துணியால் மூடி கடத்தி சென்றதாக தெரிவித்தார். தனிப்படை அமைத்து போலீசார் தேடி வந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக கர்நாடக மாநிலம் கோழிப்பாளையம் தேவராஜ், (57). தாளவாடி அருகேயுள்ள சிக்ககா ஜனுாரை சேர்ந்த மஞ்சுநாதன், 30, ஆகியோரை, பண்ணாரி சோதனைச்சாவடி பகுதியில் நேற்று கைது செய்தனர். தொழிலதிபரை கடத்தினால் அதிக பணம் கிடைக்கும் என நினைத்து கடத்தியுள்ளனர். வழக்கில் தொடர்புடைய மேலும் மூன்று பேரை தேடி வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

# கோவை மருத்துவருக்கு தமிழ்நாடு மாநில விருது!

கோயம்புத்தூர், டிச.18–

கோவை ராம்நகரில் செயல்பட்டு வரும் கோவை நீரிழிவு நோய் சிறப்பு மையம் மற்றும் மருத்துவமனையின் சர்க்கரை நோய் சிகிச்சை சிறப்பு மருத்துவர் பாலமுருகனுக்கு இந்திய மருத்துவ சங்க தமிழ்நாடு மாநில விருது, காரைக்குடியில் நடைபெற்ற டிமாகான் விழாவில் இந்த சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த விருதை இந்திய மருத்துவ சங்கத்தின் மாநில கிளை தலைவர் டாக்டர். செங்கூட்டுவன் மற்றும் செயலாளர் டாக்டர். கார்த்திக் பிரபு ஆகியோர் வழங்கினார்கள்.

கோவை நீரிழிவு நோய் சிறப்பு மையம் மற்றும் மருத்துவமனையின் சர்க்கரை நோய் சிகிச்சை சிறப்பு மருத்துவர் பாலமுருகன் 1000க்கும் மேற்பட்ட சர்க்கரை நோய் விழிப்புணர்வு மருத்துவ முகாம்களை நடத்தியுள்ளார். டாக்டர். பாலமுருகன் கோவை இந்திய மருத்துவச் சங்கத்தின் இணைச் செயலாளராக இருந்து வருகிறார். மேலும், இந்திய மருத்துவ சங்க மாநில சர்க்கரை நோய் விழிப்புணர்வு கமிட்டி தலைவராகவும் சேவை புரிந்து வருகிறார். மேலும் இவருக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு கோல்டன் டாக்டர் என்ற விருதும் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# "நல்ல தேர்வு, எளிய நாளுக்கு — அமீர் கானுடன் பிரிட்டானியா நியூட்ரிசாய்ஸ்!"



வேலூர் டிச.18

இந்தியா முழுவதும் மக்களின் அன்றாட சிறிய முடிவுகளைப் பற்றிய புதிய உரையாடலைத் தொடங்க, பிரிட்டானியா நியூட்ரிசாய்ஸ் தனது புதிய பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. "ஒரு நல்ல விஷயத்தை தேர்வு செய்வது அடுத்த விஷயத்தை எளிதாக்குகிறது" என்ற மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த யோசனை அன்றாடத்தில் எடுக்கப்படும் சிறிய நல்ல தேர்வுகள் – தேநீரில் சர்க்கரை தவிர்ப்பது போன்றவை – நாளின் போக்கையே நேர்மறையாக மாற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த சிந்தனையை அழகாக வெளிப்படுத்த அமீர்கான் தனது இயல்பான நகைச்சுவை மற்றும் நேர்த்தியுடன் பிரச்சாரத்தில் உயிர் ஊட்டுகிறார். லோவ் லிண்டாஸ் உருவாக்கிய இந்த பிரச்சாரம், நல்ல தேர்வுகள் மனநிலையை எவ்வாறுசுலபமாகமாற்றிதொடர்ந்துநல்லமுடிவுகளுக்குத் தள்ளுகின்றன என்பதை நிஜ வாழ்க்கை தருணங்கள் மூலம் காட்டுகிறது. இந்த பின்னணியில், நியூட்ரிசாய்ஸ் தனது பரந்த போர்ட்ஃபோலியோவில் உள்ள 100% ஆட்டா & மைதா இல்லாத டைஜஸ்டிவ், ஓட்ஸ் & மில்லெட் குக்கீகள்★ போன்ற ஆரோக்கியமான விருப்பங்களை முன்னிறுத்துகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், பிராண்ட் புதிய 100% மில்லெட்ஸ் ஆப்பிள் சின்னமன் குக்கீகளை★ அறிமுகப்படுத்தியுள்ளது. ₹55க்கு கிடைக்கும் இந்த தயாரிப்பு, அன்றாட பரிச்சயமான ஸ்நாக்ஸ் தருணங்களில் நல்ல தேர்வை எளிதாக்கும் நோக்கத்துடன், நுகர்வோரின் *evolving snack habits*க்கு பொருத்தமாக உருவாக்கப்பட்டுள்ளது.



மதுரை அழகர்கோவில் மலைமேல் உள்ள ஆறாவது படைவீடு சோலைமலை முருகன் கோவிலில் கார்த்திகை மாத 5–வது சோம வாரத்தையொட்டி 1008 சங்காபிஷேகம் நடந்தது.

# திருக்குறள் தொடர்பான அறிவுசார் போட்டிகள்!



அவிநாசி,டிச.18–

தமிழ்வளர்ச்சித் துறையும், அவிநாசி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையும் இணைந்து திருக்குறள் தொடர்பான கலை இலக்கிய அறிவு சார் போட்டிகள் மற்றும் கருத்தரங்கை நேற்று முதல் துவங்கியது.

தமிழ்நாடு அரசும், தமிழ் வளர்ச்சித் துறையும் ஒவ்வொரு கல்லூரிக்கும் இந்த நிகழ்வுக்காக ரூ.80 ஆயிரம் மதிப்பிலான நிதியை ஒதுக்கியுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ரூ. 31,500 பணப்பரிசை அறிவித்துள்ளது. அதேபோல் திருக்குறள் தொடர்பான கருத்தரங்கை நடத்துவதற்காக கருத்துரையாள ர்களுக்கு ரூ. 20 ஆயிரத்துக்கான மதிப்பூதியத்தை மொத்தமாக வழங்குகிறது. விழாசெலவினங்களுக்காகரூ.28,500ஐ ஒதுக்கியுள்ளது. இதில்திருக்குறள் தொடர்பானவிநாடி வினா, திருக்குறள் விவாதப்போட்டி மற்றும் திருக்குறள் உருவகக் கட்டுரை ஆகிய மூன்று போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இதன் முதல் நிக ழ்வாக நேற்று திருக்குறள் தொடர்பான நிகழ்வின் தொடக்கவிழா நடைபெற்றது. இதில் கல்லூரியின் முதல்வர் (பொ) பா. ஹேமலதா,தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் போ.மணிவண்ணன் ஆகியோர் துவங்கி வைத்தனர். பல்வேறு துறைகளை சார்ந்த பேராசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். தமிழ்த்துறையின் பேராசிரியர்கள் தே.புனித ராணி,மு. ஜோதிப்பாண்டி மற்றும் ஜெ.சரவணன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# முதுகுளத்தூரில் ரூ.8 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வேளாண்மை உதவி இயக்குநர் கைது!



முதுகுளத்தூர், டிச.18

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகாவை சேர்ந்த புகார்தாரர் முதுகுளத்தூரில் சென்ற மாதம் புதிதாக உரிமம் பெற்றுபூச்சிகொல்லிமருந்து கடை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் சில நாட்களாக முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் கேசவராமன்(50) மனுதாரர் கடைக்கு வந்து நான் தான் உனக்கு உரிமம் கொடுத்த அதிகாரி.

எனக்கு அலுவலக செலவுக்கு ரூ.15 ஆயிரம் கொடுக்குமாறு முதலில் கேட்டுள்ளார். இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு வேளாண்மை உதவி இயக்குநர் கேசவராமன் மனுதாரருக்கு மீண்டும் போன் செய்து ரூ.15 ஆயிரம் கேட்டுள்ளார். அதற்கு அவ்வளவு பணம் என்னால் கொடுக்க முடியாது என மனுதாரர் தெரிவித்ததையடுத்து ரூ.8 ஆயிரம் வழங்குமாறு கூறியுள்ளார்.

இதனையடுத்து லஞ்சம் கொடுக்க விரும்பாத மனுதாரர் ராமநாதபுரம் ஊழல் தடுப்புமற்றும்கண்காணிப்பு பிரிவு போலிசில் புகார் செய்தார்.

இ த னை ய டு த் து ல ஞ் ச ஒழிப்பு துறை போலிஸார் அறிவுத்தலின் பேரில் ரசாயனம்தடவிய பணம் ரூ.8 ஆயிரத்தை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வைத்து கேசவராமனிடம் கொடுக்கும் போது லஞ்ச ஒழிப்பு போலீசார்கைது செய்தனர்.



# குரும்பா சமுதாய மக்களை அவதூறாக பேசிய வழக்கறிஞர் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு!

கோவை,டிச,18–

கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மேட்டுப்பாளையத்தை சேர்ந்த சமூக ஆர்வலரும் சமூக நீதி பேரவையை சேர்ந்த லோகநாதன் என்பவர்மற்றும்பொதுமக்கள்இணைந்து மனு ஒன்றை வழங்கி உள்ளனர்.

மனுவில் வழக்கறிஞர் பரமசிவம் என்பவர் குரும்பா சமுதாய மக்களை அவமதிக்கும் வகையில் மிகவும் ஆபாசமாக பேசி அவற்றை வாட்அப் குழுவில் பதிவேற்றம் செய்துள்ளதாக குறிப்பி ட்டுள்ளனர். தமிழகத்தில் குறிப்பி ட்ட சமுதாய மக்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தும் வகையில் வழக்கறிஞர் பரமசிவம் பேசியுள்ள ஆடியோவிற்கான ஆதாரத்தையும் இணைத்துள்ளதாகவும்,தமிழகம் முழுவதும் உள்ள குரும்பா சமுதாய மக்களை அவமதிக்கும் வகையில் பேசியுள்ள வழக்கறிஞர் பரமசிவம் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளனர்.

அப்போது துரைசாமி செந்தில்குமார்,ராயப்பன், கிருஷ்ணசாமி, சரவணன், பாபு, மகேந்திரன், வேலுச்சாமி, சுகுமார், ரவிச்சந்திரன், விஜயகுமார், மகேஷ் குமார் சீனிவாசன் கோபால் சதீஷ் குமார் நிர்மல் ராஜ் குப்புசாமி,ரமேஷ் குமார், பத்மராஜ், கமலக்கண்ணன்,உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# திருப்பத்தூரில் பெரிய மருது பிறந்த நாள் விழா; நூற்றுக்கணக்கானோருக்கு அமைச்சர் அன்னதானம்!

திருப்பத்தூர் டிச 18

திருப்பத்தூரில் மாமன்னர் பெரிய மருதுபாண்டியரின் 277 வது பிறந்த நாளை முன்னிட்டு மாமன்னர் மருதிருவர் இளைஞர் நல அறக்கட்டளையின் சார்பில், அதன் நிறுவனரும் தலைவருமான பூக்கடை த.பாண்டியன் ஏற்பாட்டில், பெரியமருதுவின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் அமைச்சர் பெரியகருப்பன் கலந்து கொண்டார். விழாவில் மருதிருவர் தூக்கிலிடப்பட்ட நினைவிடத்தில் உள்ள அவர்களது திருவுருவ சிலைக்கு தீபாராதனை நடைபெற்றது. அப்போது அமைச்சர் பெரியகருப்பன் வழிபாடு செய்தார்.

பின்பு அங்குள்ள நினைவுத்தூணுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் 500–க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

முன்னதாக மருது பாண்டியர்களின் நினைவு மண்டபத்தில் உள்ள மருது பாண்டியர்கள் சிலைக்கு வாரிசுதாரர் ராமசாமி தலைமையில், மருதிருவர் இளைஞர்கள் நல அறக்கட்டளை சார்பாக படையல் இட்டு வழிபாடு செய்யப்பட்டு தீப தூப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

விழாவில் அகமுடையார் சங்க தலைவர் முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் விஜயசேகர் ஆலோசனைபேரில், துணை தலைவர்கள் வெல்டிங்குமார், முத்துகிருஷ்ணன், செயலாளர் சுரேஷ், துணைச் செயலாளர்கள் சத்யா சரவணன், வி.சுரேஷ், பொருளாளர் ஓய்வு பெற்ற துணை தாசில்தார் சுப்ரமணியன், 14 வது வார்டு கவுன்சிலர் பசீர் அகமது, மற்றும் பூக்கடை ஷேக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.